**O.S.No.174/2012**

**PW1 :** சுப்புலட்சுமி தேதி 19.09.2025

**வாசா 1 மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 8 மற்றும் 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1 மற்றும் 2 பிரதிவாதிகள் என்னுடைய தந்தை மற்றும் தாயார். 3ம் பிரதிவாதி என்னுடைய அண்ணன். என் பெற்றோர் கிரையம் வாங்கிய சொத்துக்களை என் அண்ணனுக்கு எழுதி வைத்துவிட்டதால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். என் பெற்றோரின் பத்திரங்களை படித்து பார்த்தேனா என்றால் என் அண்ணன் வீட்டில் அந்த பத்திரம் இருப்பதால் எனக்கு கிடைக்கவில்லை. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். என் பெற்றோர் வீட்டிற்கு நான் செல்லாமல் எத்தனை வருடம் இருக்கும் என்றால் 15 வருடம் இருக்கும். நான் என் பெற்றோர் வீட்டிற்கு செல்லாததற்கு காரணம் என்ன என்றால் மன வருத்தம் காரணமாக போவதில்லை. சொத்துக்களை என் அண்ணன் சண்முகம் அவருடைய மகனுடன் சேர்ந்து சொத்துகளை விற்று விட்டார் என்றால் 1 ½ ஏக்கர் மட்டும் விற்று விட்டார் மீதி ஏக்கர் உள்ளது. 6 ம் பிரதிவாதி தங்கமுத்து கவுண்டரின் சொத்துகள் தனியாக உள்ளது என்றால் சரிதான். 8 மற்றும் 9 பிரதிவாதிகளாகிய ஜெகநாதன் , மலர்விழி ஆகியோர் பக்கத்தில் இருப்பவர்கள். என் தாத்தா சொத்தை கிரையம் வாங்கியவர்கள். 1ம் பிரதிவாதி என் தந்தை 8 மற்றும் 9 பிரதிவாதிகளுக்கு சொத்தை விற்று விட்டார். 8 மற்றும் 9 பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய சொத்தை தனியாக அனுபவித்து வருகிறார்கள் இணைபொழிகாரர்கள். 8 மற்றும் 9 பிரதிவாதிகள் இருவரும் உடன் பிறந்தவர்கள். 9 ம் பிரதிவாதி அவருடைய சகோதரரான 8 ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் 9.6.2023 ல் எழுதி கொடுத்து

விட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. என் பெற்றோர் எத்தனை கிரையம் செய்துள்ளார்கள் என்று தெரிந்து கொள்ள வில்லங்க சான்று பார்த்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக நான் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. 7 ம் பிரதிவாதி மாலதிக்கு சொத்தை எழுதி வைத்ததால் நான் இவ்வழக்கை உடனடியாக தாக்கல் செய்துவிட்டேன். மாலதிக்கு எப்போது எழுதி கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. மாலதி சொத்தை விற்று விட்டாரா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றும் எனக்கு பங்குரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் பெற்றோர் சம்பாதிய சொத்தில் தான் நான் பங்கு கோருகிறேன். என் பெற்றோர் சொத்தை வாங்குவதற்கு முன்பாக சில சொத்துகளை விற்றதாக சொல்லியிருக்கிறேன். என் தாத்தா பெயரில் சொத்துகள் இருந்ததாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனக்கு 13 வயதில் திருமணமாகிவிட்டது. திருமணமானதில் இருந்து என் கணவர் வீட்டில் தான் வாழ்ந்து வருகிறேன். சொத்துக்களை பொதுவில் அனுபவித்ததாக ஆவணங்கள் இல்லை. தாவா சொத்துகளில் எனக்கு பங்குரிமை இல்லை என்றால் சரியல்ல. ஆகையால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.